மற்றும் ஆராய்ச்சி உள்ளிட்ட பல விஷயங்கள் பற்றி அறிக்கை தயார் செய்து கொடுக்கும் அமைப்பாகவும் இருக்கும் என்று புதிய சட்டத்தில் கூறப்பட்டுள்ளது. 'இந்தக் காலேஜியத்திலாவது மாநிலங்களுக்கு இடம் உண்டா?' என்பது சுவாரஸ்யமான கேள்வி.

காலேஜியத்தில் இரு வகை உறுப்பினர்கள் நியமிக்கப்படுகிறார்கள். அதாவது அடிப்படை உறுப்பினர்கள். இன்னொரு வகை சார்பு உறுப்பினர்கள். இதில் அடிப்படை உறுப்பினர்கள் யாரும் மாநிலங்களில் இருந்து தேர்வு செய்யப்பட மாட்டார்கள். ஆனால் சார்பு உறுப்பினர்கள் மட்டும் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் இருந்து தேர்வு செய்யப்படலாம். மாநிலங்களவை உறுப்பினர்கள் எப்படி ஒவ்வொரு மாநிலங்களில் இருந்தும் தேர்வு செய்யப்படுவார்களோ அந்த மாதிரி இந்த சார்பு உறுப்பினர்களும் தேர்வு செய்யப்படுவார்கள் என்று கூறப்பட்டுள்ளது. சரி, இந்த சார்பு உறுப்பினர்களாக இருக்க என்ன தகுதி? யாரை அந்தப் பொறுப்பிற்கு தேர்வு செய்ய வேண்டும்? இதற்கும் சட்டத்தில் வழி வகை செய்யப்பட்டுள்ளது.

அதாவது, சார்பு உறுப்பினராக வருவோர் தேசிய ஆராய்ச்சி விரிவுரையாளராக இருக்க வேண்டும். அப்படியில்லையென்றால் நோபல் பரிசு, ஃபீல்டு மெடல், ஞான பீட விருதுகள் பெற்றவர்களாக இருக்க வேண்டும் என்று வரையறுக்கப்பட்டுள்ளது. மூன்றாவதாக உலகளாவிய தரம் மிக்க கல்வி அமைப்பின் உறுப்பினராக இருப்பவரை சார்பு உறுப்பினராகப் போடலாம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த மூன்று தகுதிகளில் ஒன்றில் வரக்கூடிய கல்வியாளர்கள் எத்தனை பேர் தமிழகத்தில் இருக்கப் போகிறார்கள்? ஏன் ஒவ்வொரு மாநிலத்திலும், குறிப்பாக பின்தங்கிய மாநிலங்களில் இருப்பார்களா என்பது மில்லியன் டாலர் கேள்வி! ஆக, ஆணையத்தின் உறுப்பினர்களில் மாநிலங்களுக்கு பிரதிநிதித்துவம் இல்லை. அவர்களைத் தேர்வு செய்வதில் மாநில முதல்வர்களுக்கு எந்த உரிமையும் இல்லை. ஆணையத்திற்கு உயர் கல்விக் கொள்கையை வழிகாட்டும் 'காலேஜியம்' என்ற அமைப்பில் அடிப்படை மற்றும் முக்கிய உறுப்பினர்களான 'கோர் பெலோவ்ஸில்' மாநிலங்களின் பிரதிநிதிகள் இல்லை. கோ-ஆப்டெட் பெலோவ்ஸ் விஷயத்தில் மட்டும் மாநிலங்களின் பிரதிநிதிகள் இடம் பெறலாம். அதுவும் அவர்கள் மேற்சொன்ன மூன்று வரையறுக்கப்பட்ட தகுதிகளில் ஏதேனும் ஒன்றுடனாவது இருக்க வேண்டும். ஆனால் இந்த காலேஜியம் ஒரு மாநிலத்தின் உயர்கல்விக் கொள்கையை வரையறுக்கும் அதிகாரம் படைத்ததாகத் திகழப் போகிறது. மாநிலங்களில் உள்ள பல்கலைக்கழகங்களில் துணை வேந்தர்களை முடிவு பண்ணும் அதிகாரம் இந்த ஆணையத்திடம் வருகிறது. எப்படி?

புதிய உயர்கல்வி ஆணையம் ஒரு பட்டியலை வைத்திருக்கும். அதற்குப் பெயர் 'தேசியப் பதிவேடு' இப்பட்டியலில் ஆணையம் நிர்ணயித்துள்ள தகுதிகள் அடங்கியோரின் பெயர்கள் இடம்பெற்றிருக்கும். அந்தப் பட்டியலுக்கு மாநில அரசுகள்கூட ஆணையம் குறிப்பிட்டுள்ள தகுதிகள் நிரம்பியவர்களை அனுப்பலாம் என்று கூறப்பட்டுள்ளது. நாட்டில் உள்ள பல்வேறு பல்கலைக்கழகங்கள், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கல்வி நிறுவனங்கள் போன்றவற்றில் துணைவேந்தர்களை நியமிக்க இந்த தேசியப் பதிவேட்டில் உள்ள பிரமுகர்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம். மாநில அரசுகள் துணை வேந்தர்களை நியமிக்கும் போது இப்படிப் பெயர் கேட்டுப் பெறுவது ஒப்புக்காகவா? அல்லது கட்டாயமா? என்பதைப் பார்க்க வேண்டும். இந்தக் கமிஷனின் சட்டப் பிரிவு 25(4), 'தேசியப் பதிவேட்டில் இடம்பெறாதவர்கள் யாரும் பல்கலைக் கழகங்களிலோ அல்லது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கல்வி நிறுவனங்களிலோ துணை வேந்தர்களாக இருக்க முடியாது' என்று தெளிவாகக் கூறுகிறது. ஆகவே, இப்போது மாநில அரசுகள் கடைப்பிடிக்கும் துணை வேந்தர்களைத் தேர்வு செய்ய 'சர்ச் பேனல்' அமைப்பது எல்லாம் இந்தப் புதிய ஆணையத்தால் காலாவதியாகிறது.

துணை வேந்தர்கள் விஷயத்தில் இப்படியென்றால் மாநிலத்தில் உள்ள உயர்கல்வி வளர்ச்சி மற்றும் ஆராய்ச்சி தொடர்பான விஷயங்களில்கூட இந்த ஆணையமே ஆதிக்கம் செலுத்தும் என்றே தெரிகிறது. ஏனென்றால் மாநிலத்தில் உள்ள உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி எப்படியிருக்கிறது என்பது பற்றிய அறிக்கை ஒன்றை ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை இந்த ஆணையம் தயாரிக்கும். அப்படித் தயாரிக்கப்பட்ட அறிக்கையை அந்த ஆணையம் நேரடியாக மாநிலத்தின் கவர்னருக்கு அனுப்பும். கவர்னர் என்ன செய்ய வேண்டும் என்றால், 'அந்த அறிக்கையின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? இனிமேல் எடுக்கப் போகும் நடவடிக்கை என்ன?' என்பது பற்றிய ஒரு குறிப்பை அதனுடன் இணைக்க வேண்டும். பிறகு இந்த அறிக்கையையும், குறிப்பையும் சட்டமன்றத்தில் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வளவுதான்!

அதாவது டெல்லியில் உள்ள ஆணையம் சென்னையிலும், கன்னியாகுமரியிலும் உயர்கல்விக்கு என்ன செய்ய வேண்டும் என்பதை வரையறுத்து ஓர் அறிக்கை கொடுக்கும். அதை மாநிலத்தில் உள்ள கவர்னர் சட்டமன்றத்தில் வைத்து அது தொடர்பான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

மாநில சுயாட்சி கேட்கும் தி.மு.க.விற்கு இது உண்மையிலேயே சோதனையான காலம்! காங்கிரஸுடன் கூட்டணி வைத்திருப்பதால் இலங்கைப் பிரச்சினையில் நெருக்கடிகளைச் சந்தித்தது அக்கட்சி! அடுத்து சேதுசமுத்திரத் திட்டத்தை ஏறக்குறைய மூட்டை கட்டும் முடிவுக்கே மத்திய அரசு வந்ததையும் எதிர்க்க முடியாமல் இருக்கிறது தி.மு.க. இப்போது அந்தக் கட்சியின் ஆரம்பகாலக் கோரிக்கையான மாநில சுயாட்சிக்கே உலை வைப்பதாக இருக்கிறது புதிதாக வரப் போகின்ற தேசிய உயர்கல்வி ஆராய்ச்சி ஆணையம்! என்ன செய்யப் போகிறது கழகம்?

▼